# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR

**O.S. No. 200/2004**

Deposition of **D.W.2** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K.Menaka, Gr. III Bench Clerk of this court, on 18.10.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : மணி | Father's Name | : புள்ளியப்பன் |
| Village | : சதாசிவபுரம் | Taluk | : தலைவாசல் |
| Calling | : விவசாயம் | Age | : 64 |

துவக்க நேரம் : 12.47 P.M

**2**-ஆம் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. எனது அம்மா பெயர் என்ன என்றால் செல்லம்மாள். 4-ஆம் பிரதிவாதி நடேசனின் அக்கா தான் செல்லம்மாள் என்றால் ஆமாம். எனது பிரமாண பத்திரிக்கையில் 20 வருடத்திற்கு முன்பு யார் முன்னிலையில் யாருக்காக சமரசம் பேசப்பட்டது என்றால் 2-ஆம் வாதிக்கும், 4-ஆம் பிரதிவாதிக்கும் பேசப்பட்டது.

2. அப்பொழுது நாங்கள் மூன்று பேர் மட்டும் தான் பேசினோமா என்றால் இல்லை நிறைய நபர்கள் இருந்தார்கள், பெயர் குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் தற்பொழுத ஞாபகம் இல்லை. எனது பிரமாண பத்திரிக்கையில் 22 செண்ட் -ஐ 2-ஆம் வாதி 4-ஆம் பிரதிவாதியிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொண்டதாக நான் சொல்லியுள்ள நிலம் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் ஞாபகம் இல்லை.

3. அதேபோல் அந்த 22 செண்ட் நிலம் நடேசனுக்கு எப்படி வந்தது என்று தெரிந்து

கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன், நடேசனுக்கு கிரயத்தின் மூலம் வந்தது. அதேபோல் எனது பிரமாண பத்திரிக்கையில் எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து 4-ஆம் பிரதிவாதி நடேசன் ஏக் 2.04 நிலத்தை அனுபவம் செய்து வருவதாக நான் சொல்லியுள்ள நிலையில் அது சர்வே எண்ணிற்கு உட்பட்டது என்று என்னால் சொல்லமுடியுமா என்றால் ஞாபகம் இல்லை.

4. நடேசனின் சித்தப்பா ராமசாமி என்பவர் பைசலில் கலந்து கொண்டாரா என்றால் ஞாபகம் இல்லை. நான் பிறந்ததிலிருந்து சதாசிவபுரம் கிராமத்தில் தான் வசித்து வருகிறேன் என்றால் ஆமாம். அங்கிருந்து துலுக்கனூர் எத்தனை கி.மீ. என்றால் 5 கி.மீ. பைசல் பேசும் போது நடேசன் எதுவும் ஒத்துக்கொள்ளவில்லை என எனது பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் 4-ஆம் பிரதிவாதி ஒத்துக்கொள்ளவில்லை, பிரச்சனையை வேறு வழியில் தீர்த்துக்கொள்ளலாம் என கண்டுள்ளது என்றால் சரிதான்.

5. 4-ஆம் பிரதிவாதியின் தாயாரும் எனது தாயாரும் சகோதரிகள் என்ற முறையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எந்தவிதமான ஒரு பைசலும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எந்தெந்த சர்வே எண்ணில் யார் யார் அனுபவத்தில் உள்ளார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால், சர்வே எண் தெரியாது. ஆனால் அனுபவத்து வருகிறார்கள்.

6. வாதிகளின் தகப்பனார் ராமசாமி கவுண்டருக்கு பிரிந்த பாகத்தில் அவரது மகன் 2-ஆம் வாதி இளையப்பன் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். ராமசாமி கவுண்டர், கைலப்ப கவுண்டர் மற்றும் அவரது தகப்பனார் இளையப்ப கவுண்டர் இவர்களுக்கிடையே பாகம் பிரிந்தது பற்றி எனக்கு தெரியாது என்றாலும், யார் யார் எந்தெந்த சர்வே எண்ணில் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல.

Typed by Tmt. L.Kalaiselvi, O.S. No.200/2004, Dt.18.10.2024.

<u>**3**-ஆம் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

7. வழக்கு சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் இளையப்ப கவுண்டர், கைலப்ப கவுண்டர் மற்றும் ராமசாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்டது. இந்த வழக்கை யார் தாக்கல் செய்தார்கள் என்றால் செல்லம்மாள், இளையப்பன், செங்கோடன் ஆகிய மூவரும் சேர்ந்து தாக்கல் செய்தார்கள்.

8. இவர்கள் மூவரும் எதனடிப்படையில் பாத்தியம் கோரியுள்ளார்கள் என்றால் குடும்ப சொத்து என்பதால் வாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். வழக்கு சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் இளையப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்டது. ஜுவனாம்சத்திற்காக ஒதுக்கப்பட்ட பிறகு செலவினத்திற்காக பணம் வேண்டி விற்பனை செய்துவிட்டார். இளையப்ப கவுண்டருக்கு எத்தனை மகன்கள் என்றால் கைலப்ப கவுண்டர், ராமசாமி கவுண்டர் என்ற இரு மகன்கள்.

9. வாதி செல்லம்மாள் யாருடைய மனைவி என்றால் ராமசாமியின் மனைவி, வாதிகள் இளையப்பனும், செங்கோடனும் ராமசாமியின் மகன் என்றால் ஆமாம். 4-ஆம் பிரதிவாதி நடேசன் 2, 3 வாதிகளின் சித்தப்பா மகன் என்றால் ஆமாம். ராமசாமி குடும்பத்திற்கும் நடேசன் குடும்பத்திற்கும் தான் இந்த சொத்துக்கள் பாத்தியப்பட்டது என்றால் ராமசாமி அவரது சொத்துக்களை விற்றுவிட்டார்.

10. ராமசாமி சொத்தை விற்கவில்லை என்றாலும் நடேசன் மற்றும் இளையப்பன் குடும்பத்தார் பாக சொத்துக்களை அடையக்கூடாது என்பதற்காக ராமசாமி நிலத்தை விற்றுவிட்டார் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல, பெயரை மாற்றி சொல்லிவிட்டேன். வாதிகள் குடும்பத்திற்கும் பிரதிவாதிகள் குடும்பத்திற்கும் சரிசமமாக சொத்தை பிரிக்கவேண்டும் என்பதை மறைத்து பிரதிவாதிகளுக்கு மட்டுமே பாக உரிமை உள்ளது என்று தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed by Tmt. L.Kalaiselvi, O.S. No.200/2004, Dt.18.10.2024.

2, 3-ஆம் வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

பிரதிவாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.

முடிவு நேரம்: 01.18 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-S.Munusamy
Additional Distrit Munsif(F.A.C), Attur

Typed by Tmt. L.Kalaiselvi, O.S. No.200/2004, Dt.18.10.2024.